ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2257/71 - 2021 දෙසැම්බර් මස 12 වැනි ඉරිදා - 2021.12.12
*2257/71 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், இப்பிரகடனத்தின் மூலம் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு திசெம்பர் மாதம் பன்னிரண்டாம் நாளன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப் படுகின்றது என்பதையும், பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரின் ஆரம்பமானது, இரண்டாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு சனவரி மாதம் பதினெட்டாம் திகதி மு. ப. 10.00 மணியாக நியமிக்கப்பட்டு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்றக் கூட்ட மண்டபத்தில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கப்படுகின்றது என்பதையும் இத்தால் சகலரும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு திசெம்பர் மாதம் பன்னிரண்டாம் நாளாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

1A - G 35294 — 370 (2021/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*